# வாழ்க்கையே ஆனந்தம்!



சத்குரு ஜக்கி வாசுதேவ்

மனிதனும் இயற்கையும் தனித்தனியானவையல்ல. நமது உயிர் இயற்கையோடு சம்பந்தப்பட்டதுதானே? இரண்டையும் தனித்தனியாக பிரித்துப் பார்ப்பதால்தான் மனிதகுலத்திற்குப் பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன.

இயற்கை இரண்டுவிதமாக உள்ளது. ஒன்று, பொருள்தன்மை சம்பந்தப்பட்ட இயற்கை. இன்னொன்று உள்தன்மை சம்பந்தப்பட்ட இயற்கை. இந்த இரண்டு வகை இயற்கையுடன் மனிதன் இணைந்திருக்கும்போதுதான் அவன் வாழ்க்கையை சமநிலையில் ஆனந்தமாக வாழ வாய்ப்பிருக்கிறது.

தற்போது வெளிச்சூழலில் இருக்கின்ற இயற்கை பற்றிப் பேசவேண்டிய தேவையுள்ளது. ஏனென்றால், வெளியே உள்ள இயற்கையோடு தொடர்பு கொள்ளாமல் இயற்கையை அழித்து வந்திருக்கிறோம். தற்போது இயற்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்

திருக்கிறது. இயற்கையை நாம் காப்பாற்ற வேண்டியதில்லை. இயற்கையின் மடியில்தான் நாம் இருக்கிறோம். மனிதனின் செயல் இயற்கைக்கேற்ப நடந்திருந்தால், அதைக் காப்பாற்றுவதற்கான தேவை ஏற்பட்டிருக்காது. இயற்கை எப்படியிருக்கிறதோ, அப்படித்தான் நம் வாழ்க்கையும் இருக்கும். எனவே நாம் செய்யும் செயல்கள், இயற்கைக்கு ஏற்றாற்போல இருக்கவேண்டும்.

தொடக்கத்தில் நாம் உருவாக்கிய தொழில்நுட்பங்கள் இயற்கைக்கு எதிர்மறையாகவே இருந்தன. காலம் செல்லச்செல்ல நமது செயல்வேகத்தினை அதிகப்படுத்துவதற்காக ஏற்படுத்திய தொழில்நுட்பங்கள் எல்லாம் பூமிக்கு எதிர்மறையாகச் சென்றுவிட்டன. இதனால் இப்போது இயற்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது.

விஞ்ஞானங்களும் தொழில்நுட்பங்களும் இயற்கையில் உள்ள பலவற்றின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இயந்திரத் தொழில்நுட்பமாக இருந்தாலும், மின்சாரமாக இருந்தாலும், மின்னணுவாக இருந்தாலும்... இவையெல்லாமே இயற்கையில் இருப்பவைதான். நமது உடலிலேயே அவை உள்ளன. ஒரு இயந்திரமாகப் பார்ப்பதானால் நம் உடலைப்போல ஒரு இயந்திரம் இதுவரை உருவாக்கப்படவில்லை. மிக உயர்ந்த நிலையில் இந்த உடலில் மின் இணைப்பு உள்ளது; மின்னணு அமைப்பும் உள்ளது. மிக உயர்ந்த நிலையில் இந்த உடலில் தகவல் தொழில்நுட்பமும் உள்ளது. வெளிச்சூழ்நிலையில் எதையெல்லாம் நாம் கண்டுபிடித்து பயன்படுத்திக்க்கொண்டிருக்கிறோமோ, அதன் அடிப்படை இயற்கையில் ஏற்கனவே இருப்பதே. வெளியே இவற்றை எப்படி உருவாக்குவது என்பதைத்தான் கற்றுக்கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்தத் தொழில்நுட்பங்கள் மிக உயர்ந்த நோக்கத்தில் செயல்பட வேண்டுமானால், அடிப்படையாக நமது உடல் எப்படி செயல்படுகிறது, மனம் எப்படி செயல்படுகிறது, சுற்றியிருக்கும் சூழ்நிலைகள் எப்படி உள்ளன, இயற்கை எப்படி செயல்படுகிறது என்பதை கவனித்துப் பார்த்தால் எல்லா விதமான தொழில்நுட்பங்களும் இவற்றில்தான் உள்ளன என்பதை அறியலாம்.

பிரபஞ்சத்தில் இல்லாததை நாம் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கனவே இருப்பதைத்தான் கண்டுபிடித்திருக்கிறோம். ஏற்கனவே இருப்பதைத்தான் கண்டுபிடிக்க முடியும். இதைப் புரிந்துகொள்ளும் தன்மை ஆழமாகும்போதுதான் இயற்கைக்கும் மனிதனுக்கும் ஏற்றவாறு தொழில்நுட்பத்தினை வளர்ச்சியுறச் செய்யமுடியும். இயற்கையின் செயல் எப்படிப்பட்டது அல்லது தன் உடலின் செயல்பாடு எத்தகையது என்பதை புரிந்துகொள்ளாத மனிதன்தான் தொழில்நுட்ப வளர்ச்சி என்ற பெயரில் இயற்கைக்கு எதிராக செயல்படுகிறான். இயற்கைக்கு எதிராக செயல்படும்போது அவன் தனது உயிருக்கே எதிராக செயல்படுகிறான். 50 வருடங்களுக்கு முன்னர் செய்ததன் விளைவை இப்போது உணர்ந்து வேறு விதமாக மாற்றிக்கொள்கிறோம். இன்

**பிரபஞ்சத்தில் இல்லாததை நாம் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கனவே இருப்பதைத் தான் கண்டுபிடித்திருக்கிறோம்.**



னும் சில வருடங்கள் கழித்து அதன் விளைவை உணர்ந்து அதையும் வேறுவிதமாக மாற்றிவிடுவோம். இப்படித்தான் இது நடந்துகொண்டிருக்கிறது. இந்தத் தடுமாற்றம் எதனால்? 'மனிதனுடைய அடிப்படைத் தேவையென்ன... இயற்கையிலிருந்து இந்தத் தேவைகளை எப்படி பெற்றுக் கொள்வது' என்ற முழுமையான பார்வை இல்லாததுதான்.

சென்னை மாநகருக்குப் புதிதாக வந்தவர்கள் சிலர் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினார்கள். ஆட்டோ டிரைவர், ஆட்டோவை மிக அதிகமான வேகத்தில் தாறுமாறாக ஓட்டிச் சென்றார். அதில் உட்கார்ந்து பயணம் செய்தவர்கள் பயத்தில் மிரட்சி அடைந்தார்கள். மெதுவாகப் போகுமாறு அவர்கள் எவ்வளவோ சொல்லியும் டிரைவர் அதே வேகத்தில் போய்க் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மிகவும் குறுகலான தெருவில் போக வேண்டியிருந்தது. அந்த குறுகலான தெருவிலும் ஆட்டோவை அதே அசுர வேகத்தில்தான் ஓட்டிச் சென்றார். அவ்வாறு செல்லும்போது இரண்டு பக்கமும் இரண்டு லாரிகள் வந்தன. அப்போதும் அதே வேகத்தில் ஆட்டோவை ஓட்டினார். லாரிகளைக் கடந்து ஆட்டோ வந்தவுடன், அதில் பயணித்தவர்கள், "இரண்டு பக்கமும் லாரிகள் வந்தபோதும் எப்படி இவ்வளவு வேகமாய் வந்தீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு ஆட்டோ டிரைவர், "எனக்கு பயமாக இருந்ததால் கண்ணை மூடிக் கொண்டேன்" என்றார்.

எல்லாம் இப்படித்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நமக்குப் புரியாதபோது கண்ணை மூடிக்கொண்டால் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் நம் வாழ்க்கை மட்டுமல்ல, அடுத்த தலைமுறையையும் பாதிக்கும் சூழலை உருவாக்கி வைத்திருக்கிறோம். இப்போது நாம் வாழும் முறையைப் பார்த்தால், 'நாம்தான் கடைசி தலைமுறை' என்பதுபோல வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்குப் பின்னால் வருகின்ற தலைமுறைகளும் வாழும்விதமாக உலகத்தை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதரும் நம்மைச் சூழ்ந்திருக்கிற இயற்கையைக் காத்து நாமும் நமது சந்ததியினரும் நன்றாக வாழ்வதற்கான ஒரு சூழலை எப்படி உருவாக்குவதென கவனித்து வாழ வேண்டும். இல்லாவிட்டால் கண்ணை மூடிக்கொண்டு வண்டியை ஓட்டுவதுபோல நம் வாழ்க்கைச் சூழ்நிலை இருக்கும். ●